கலாதீபம்
KALADEEPAM
ஸ்தாபிதம் 2020 01.11.2024 தீபம் 29

# கலாசாலை நிறுவிய நாள்

## நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றன

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை 01.10.1923 இல் நிறுவப்பட்டு நூற்றொரு ஆண்டுகள் நிறைவடையும் நிலையில் அதனை கௌரவப்படுத்தும் வகையில் அமைந்த கலாசாலை தினவிழா 01.10.2024 செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு கலா சாலை ரதிலக்க்ஷ்மி மண்டபத்தில் இடம்பெற்றது.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கலாசாலையின் பழைய மாணவியும், யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளருமாகிய திருமதி. ஜமுனா ராஜசீலன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

நிகழ்வுகள் யோகலிங்கேஸ்வர ஆலய பூசை வழிபாட்டுட்டுடன் ஆரம்பமாகின. தொடர்ந்து தேசியகொடி மற்றும் கலாசாலைக் கொடிகள் ஏற்றப்பட்டன. தேசிய கீதமும் இசைக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து கலாசாலையில் அமைந்துள்ள சரஸ்வதி தெய்வத் திருவுருவச்சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டது.

கலாசாலை சிவன் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ பா.செல்வசேனக்குருக்கள் ஆசியுரை வழங்கினார். கலாசாலை மாணவர்கள் சார்பில் விஞ்ஞானநெறி ஆசிரியமாணவர் செந்தூர்ச்செல்வன் உரையாற்றினார்

யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்வியியல் துறை விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா **சேர் பொன் இராமநாதன் நினைவுப் பேருரை** ஆற்றினார்.

தொடர்ச்சி 5ஆம் பக்கம்










01.10.2024 — 31.10.2024 காலப்பகுதிக்கான நிகழ்வுகளின் தொகுப்பு

## கலாதீபக் குழுமம்

**காப்பாளர்**
திரு சந்திரமௌலீசன் லலீசன்
அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

**பிரதம ஆசிரியர்**
செல்வி தர்ஷினி முத்துராஜா
விரிவுரையாளர், காப்பாளர் ஊடகமன்றம்

**வள ஆலோசனை**
திரு கணபதிப்பிள்ளை செந்தில்குமரன்
பிரதி அதிபர்

திரு தங்கராஜா கோபாலகிருஷ்ணன்
பிரதி அதிபர்

திருமதி சத்தியா ரஞ்சித்
உபஅதிபர்

**வளவார்கள்**
செல்வி மாலதி பத்மநாதன்
விரிவுரையாளர்

திரு வேலும்மயிலும் நந்தகுமார்
விரிவுரையாளர்

செல்வி சுஜீவா அருள்லிங்கம்
விரிவுரையாளர்

திரு இ.செந்தூர்ச்செல்வன்
ஆசிரிய மாணவன் விஞ்ஞானநெறி (2023/2024)

செல்வி தி.பெலினி
ஆசிரிய மாணவி விஞ்ஞானநெறி (2023/2024)

**பட ஒருங்கிணைப்பு**

செல்வநாயகம் கஜந்தன்
தொழில்நுட்ப உதவியாளர்

திரு மு.கஜேந்திரன்
ஆசிரியமாணவன் விஞ்ஞானநெறி (2023/2024)

கலாதீபத்தில் வெளிவரும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையவராவார். ஆக்கங்களில் வெளியிடப்படும் கருத்துக்கள் கலாசாலையின் கருத்துக்களாக கொள்ளப்படமாட்டா.



**வெளியீடு**

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
இருபாலை கோண்டாவில் வீதி,
இருபாலை.
தொலைபேசி: 0212230323

**மின்னஞ்சல் முகவரி**
kaladeepam.ktc@gmail.com


## உலக இருதய தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஒழுங்கமைத்த துவிச்சக்கர வண்டி ஓட்டும் விழிப்புணர்வு நிகழ்வு 06.10.2024 காலை கொட்டும் மழைக்கும் மத்தியில் சிறப்பாக இடம்பெற்றது

உடல் ஆரோக்கியத்தை பேணுவதற்கு சைக்கிள் ஓடுவது சிறந்த உடற்பயிற்சியாக அமையும் என்பதை எடுத்துரைக்கும் நோக்குடன் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையினர் தாதியர் பயிற்சி கல்லூரியினர் வட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினர் யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினர் காவல்துறையினர் என பல அமைப்புக்களை சேர்ந்த நூற்றுக் கணக்கானோர் நிகழ்வில் பங்கு பற்றினர்.

யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வு போதனா வைத்திய சாலையில் ஆரம்பித்து பருத்தித் துறை வீதி வழியாக இருபாலை சந்தியை அடைந்து ஆசிரியர் கலாசாலை வாயிலின் ஊடாக உப்புமடம் சந்தியை அடைந்து பின் காங்கேசன்துறை வீதி வழியாக சத்திரத்துச் சந்தியை அடைந்து மீண்டும் போதனா வைத்தியசாலையை அடைந்தது. 15 கிலோ மீட்டர் தூரம் கொண்டதாக அமைந்து இத்துவிச் சக்கர வண்டி ஓட்டப்போட்டியில் பங்கேற்ற அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.






# கலாதீபம்

කලාදීප

KALADEEPAM

கலாதீபம் – மின்சஞ்சிகை – கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஊடகக் கழக வெளியீடு

කලා දිපම , e - සඟරාව, කෝප්පායි ගුරු විද්‍යාලයීය මාධ්‍ය සංගමයේ ප්‍රකාශනයක්.

The Kaladeepam - e magazine - published by media club of Kopay Teachers' College


## நமது நோக்கு

### ஆசிரியத்துவம்

கல்வியில் ஏற்படும் முன்னேற்றமானது ஒரு நாட்டின் அபிவிருத்தியில் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஒரு நாட்டின் வளமான எதிர்காலம் அந்நாட்டின் சிறுவர்களுக்கு அளிக்கப்படும் கல்வியிலே தங்கியுள்ளது.

கல்வியின் பண்புத் தரத்தில் ஆசிரியர் கொண்டுள்ள வகிபாகம் புறக்கணிக்க முடியாதளவு பிரதானமானது. இதற்கு ஆசிரியர் தனது வாண்மைத்துவ ஆற்றல் களை விருத்தி செய்தல் அவசியம்.

வாண்மை விருத்திக்கு கல்விப் புலன் குறித்த விரிவான அறிவும் முயற்சியும் இன்றியமையாதவை. பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெறும் நோக்குடன் மாத்திரமே மாணவர்களை தயார்செய்தல் ஆசிரியருக்குரிய பணியன்று, மாறாக ஒவ்வொரு மாணவனும் அவரவருடைய வாழ்வில் சிறக்கவும் ஒழுக்கம் மிகுந்த பிரஜையாக வாழ்வும் வழிகாட்டு தலே. சமகால உலகில் எழுகின்ற புதிய சவால்களுக்கு முகம்கொடுக்கக் கூடிய அறிகைசார் ஆற்றல்களை, உயர் நிலைப்பட்ட சிந்தனைகளை மாண வர்கள் மத்தியில் வளர்த்தெடுப்பது ஆசிரியர்களின் சமகாலக் கடமைகளில் பிரதானமானவை.

மாணவர்களுக்கு வினைத்திறன் மிக்க கற்றலை போதிக்க போதிய வளங்கள் பெரும்பாலும் பற்றாக் குறை யாக இருப்பதுடன். கல்விக்கலைத்திட்டமும் பெரும்பாலும் மாணவர்களுடைய நூற்கல்வியை மையப்படுத்தியும் பரீட்சையில் சித்தி பெறுதலை குறிக்கோளாக கொண்டிருத்தலும் ஆரோக்கியமானது அல்ல.

அத்துடன் காலத்திற்கு ஏற்ற வகையில் ஆசிரியர்களும் தத்தமது அறிவை விருத்தி செய்து கொள்ள வேண்டும். உதாரணமாக தொழில்நுட்ப அறிவினை குறிப்பிட முடியும். ஆசிரியர் மற்றும் சமுகத்திற் கிடையான தொடர்பும் வலுவாக காணப்பட வேண் டும். சமூகத்தின் தற்கால மற்றும் எதிர்கால தேவைகளை அறிந்து அதற்கேற்ப கற்றலை வழங்க வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது.

மெழுகாய் தன்னை உருக்கி மாணவர்களுக்கு ஒளிமய மான வாழ்க்கைக்கு வழிகாட்டும் ஆசிரியர்களைப் போற்றுவோம்.

# விவசாயக் கண்காட்சி 02.10.2024

வடக்கு மாகாண விவசாய திணைக்களத்தின் ஏற்பாட்டில் திருநெல்வேலியில் உள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் விவசாய கண்காட்சி 02.10.2024 தொடக்கம் ஆரம்பமாகி 04.10.2024 வரை நடைபெற்றது. இக்கண்காட்சியை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ஒரு தொகுதி ஆசிரிய மாணவர்களும், பிரதி அதிபர், விரிவுரையாளர்களும் பார்வையிட்டனர்.







# News in Brief - Month of October

## 01.10.2024
### Kopay Teachers' College Foundation Day Ceremony

This event was held under the leadership of the Principal Shandramouleesan Laleesan, the Director of Jaffna Zonal Education Mrs. Jamuna Rajaseelan graced the occasion as the chief guest.

The Ramanathan memorial address was held to honor Sir Pon Ramanathan who donated the land to establish the college.

Mr. R. Sarveswara, Lecturer, Department of Education, University of Jaffna, gave a memorial speech on the subject of "Philosophical Research Degrees : Emerging Challenges and avenues for Teacher Educators"

Cake was cut to mark the 101st anniversary

## 05.10.2024
### International Teacher's Day organized by Kopay Teachers' College Teacher's Student Union

This event was held under the leadership of the Principal S.Laleesan. Kalakeerthi Shanthini Sivanesan, former Deputy Principal & lecturer of College and Sri Lanka famous Bharatanatya Artist, was the chief guest.

Kalakirthi Shanthini Sivanesan was also honored with the centenary honor on the occasion and was given a special copy of Kaladeepam E-magazine of October, which appeared as his personality feature.

## 06.10.2024
### Cycle Race—The awareness event organized by the Jaffna Teaching Hospital

The cycle race was organized to mark the World Heart Day. It was organized by Jaffna Teaching Hospital. Kopay Teachers' College Lecturers were participated in the race. To keep avenuesabout of the World Heard Day to the Socity. The race was held from Teaching Hospital through Kopat Teachers/ College up to 15 Km.

## 09.10.2024
### Special Gathering of Reading Month

Jaffna University Retired Professor M. Nataraja sundaram was the guest speaker

Lecturer Poet Vel Nandakumar delivered the introductory speech of the chief Guest and College Principal S.Laleesan delivered remark of the week activities.

## 12.10.2024 - Vani Vilaz

It was held Saturday at 11 am the Principal Service officer K.Kailainathan who attended as the chief guest.

Petron of the Hindu Union K. Balasanmugan delivered the opening speech.

The Deputy Principal of the College, Lopalakrishnsn, gave a speech on the theme of Saiva Heritage in the College.

## 16.10.2024
### World Mental Health Day

The guest speaker was Jaffna University Department of Psychology Senior Lecturer Dr K. Gajavindan attended and delivered an address on the topic of 'Power of Thoughts'.

Dr K. Gajavindan handed over a volume of his writings to the Lecturer in charge of library, Velummayum Senthan.

## 23.10.204
### Commemoration of classical music legend M.D.N.Veeramani Iyer

Mrs. Madhivani Vignarajah, former Deputy Director of Aesthetics, Education, Department, NP, as the guest speaker on the occasion.

## 25.10.2024 & 30.10.2024

Manavalakkolam Festival of Hindu Temple was held on 25.10.2024. and the Annual Feast of the Lady Mary Chapel was held on 30.10.2024.

# கலாசாலை திறுவியநாள் நிகழ்வுகள்

முதலாம் பக்கத் தொடர்ச்சி.....

பிரதி அதிபர்களான க.செந்தில்குமரன் வரவேற்பு உரையையும் த.கோபாலகிருஷ்ணன் நன்றி உரையையும் ஆற்றினர்.

101 ஆவது ஆண்டு நிறைவை குறிக்கும் வகையில் அமைக்கப்பட்ட குதப்பி (கேக்) வெட்டப்பட்டது.

இந்நிகழ்வில் முன்னாள் அதிபரான வே.க.கணபதிப்பிள்ளை அவர்கள் கலந்து சிறப்பித்தார். முன்னாள் ஆசிரிய மாணவர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.





















# ஆசிரியர்மன்றம் நடாத்திய சர்வதேச ஆசிரியர்தினம் கலாகீர்த்தி சாந்தினி சிவநேசன் அம்மையார் (ஓய்வுநிலை பிரதிஅதிபர்) கலந்து சிறப்பித்தார்

05.10.2024 சனிக்கிழமை காலை கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் கலாசாலையின் முன்னாள் விரிவுரை யாளரும், பிரதி அதிபருமாகிய இலங்கையின் புகழ்பூத்த பரதநாட்டிய கலைஞருமாகிய கலாகீர்த்தி சாந்தினி சிவநேசன் அம்மையார் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

கலாசாலையின் யோகலிங்கேஸ்வரர் ஆலயத் தில் இடம் பெற்ற பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து விரிவுரையாளர்கள் ஆசிரிய மாணவர்களால் மலர் மாலை அணிவிக்கப்பட்டு மண்டபத்தை நோக்கி அழைத்துவரப்பட்டனர்,

தேசியக்கொடி கலாசாலைக்கொடி என்பன ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து மண்டப நிகழ்வுகள் இடம் பெற்றன. நிகழ்வில் கலாகீர்த்தி சாந்தினி சிவநேசன் அவர்களுக்கு நூற்றாண்டு கௌரவம் வழங்கப்பட்டதோடு அவரது ஆளுமைச் சிறப் பிதழாக வெளிவந்த அக்டோபர் மாத கலாதீபம் மின் இதழின் சிறப்பு பிரதி கையளிக்கப்பட்டது. ஆசிரிய மாணவர்கள் வழங்கிய கவியரங்கம் நாடகம், முதலிய சிறப்பு கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.















# வாசிப்புமாத சிறப்பு ஒன்றுகூடல்
## ஓய்வுநிலை பேராசிரியர் மா.நடராஜசுந்தரம் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) அவர்கள் கலந்து சிறப்பித்தார்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை நடத்திய வாசிப்பு மாதத்திற்கான சிறப்பு ஒன்று கூடல் நிகழ்வு 09.10.2024 புதன் காலை ஆங்கிலநெறி ஆசிரிய மாணவி டேவிட் லி ஜானி தலைமையில் நடை பெற்றது இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஓய்வுநிலை பேராசிரியர் மா.நடராஜசுந்தரம் அதிதி பேச்சாளராக கலந்து கொண்டார் விசேட கல்விநெறி ஆசிரிய மாணவி ஷா ஜகான் பாத்திமா நுஸ்லா மாணவர் உரையை வழங்கினார்

பேராசிரியர் மா.நடராஜசுந்தரத்திற்கான அறிமுக உரை யை விரிவுரையாளர் கவிஞர் வேல் நந்தகுமார் ஆற்றினார் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் நிறைவுரை ஆற்றினார். பேராசிரியர் மா.நடராஜசுந்தரம் தான் வெளியிட்ட தனது ஒன்பதாவது புத்தகமாக அமைந்த அறிவு சார்ந்த உலகில் கல்வி என்ற நூலின் உள்ளடக்கம் பற்றி எடுத்துக் கூறினார் அதிதி பேச்சாளர் கலாசாலையின் முகாமைத்துவக் குழுவினரால் கௌரவிக்கப்பட்டார்.

ஹாட்லி கல்லூரியின் புகழ் பூத்த பழைய மாணவராகிய பேராசிரியர் மா.நடராஜ சுந்தரம் தற்போது 79 ஆவது வயதை நிறைவு செய்திருக்கிறார். 1964 ஆம் ஆண்டு இலங்கை பாடசாலைகளி டையே இடம்பெற்ற கிரிக்கெட் போட்டியில் ஒன்பது போட்டிகளில் கலந்து கொண்டு 1018 ஓட்டங்களை குவித்தவர் 60 விக்கெட்டுகளை சாய்த்தவர். இவர் விளையாடிய காலத்தில் துடுப்பாட்ட வீரருக்கு பாதுகாப்பு கவசங்களோ தலைக்கவசமோ இருக்கவில்லை வன்பந்தை (cock ball) துணிந்து எதிர்கொண்டு விளையாடவேண்டும் அந்த அனுபவங்களையும் தனது பேச்சின் இடையே பகிர்ந்துகொண்டார்.











# இந்துமன்றம் நடாத்திய வாணிவிழா
## திரு க.கைலைநாதன்(அதிபர்)
## அவர்கள் கலந்து சிறப்பித்தார்

12.10.2024 சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கலாசாலையில் நடைபெற்றது. முன்னதாக யோகலிங்கேஸ்வரர் ஆலயத்தில் விஜயதசமி பூஜை வழிபாடுகள் இடம் பெற்றன. ஆயுத பூஜை, மானம்பு உற்சவம் என்பன இடம் பெற்று அதனைத் தொடர்ந்து சிறார்களுக்கான ஏடு தொடக்கும் நிகழ்வு இடம்பெற்றது. கலாசாலை அதிபர் வருகை தந்த சிறார்களுக்கு அட்சர ஆரம்பம் செய்து வைத்தார்.

தொடர்ந்து பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கலாசாலையில் பழைய மாணவரும் அதிபர் சேவை உத்தியோகத்தருமான க.கைலைநாதன் மாலை அணிவிக்கப்பட்டார்.யோகலிங்கேஸ்வரர் ஆலயத்திலிருந்து சரஸ்வதி திருவுருவம் பிரதான மண்டபத்திற்கு எழுந்தருளச் செய்யப்பட்டது. இதன்போது தேசியக்கொடி கலாசாலைக் கொடி என்பன ஏற்றப்பட்டன.

கலாசாலை வாயிலில் எழுந்தருளி உள்ள சரஸ்வதி திருவுருவச் சிலைக்கு பிரதமர் விருந்தினர் மலர் மாலை அணிவித்து வணக்கம் செலுத்தினார். தொடர்ந்து மங்கல விளக்கேற்றலுடன் மண்டப நிகழ்வுகள் ஆரம்பமாகின. ஆங்கில நெறியைச் சேர்ந்த ஆசிரிய மாணவி திருமதி கௌசி தினேஷ் திருமுறைப் பாக்களைப் பாடினார். பெலினி திருக்குமாரன் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.

கலாசாலையின் அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையுரை ஆற்றினார். இந்து மன்ற காப்பாளர் கு. பாலசண்முகன் தொடக்க உரை ஆற்றினர். கலாச்சாலையின் பிரதி அதிபர் த கோபாலகிருஷ்ணன் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் சைவப் பாரம்பரியம் என்ற பொருளில் உரை நிகழ்த்தினார் நன்றி உரையினை ஆங்கிலநெறி ஆசிரிய மாணவி திருமதி பிருந்தா ஆற்றினார்.

பிரதம விருந்தினருக்கான கௌரவிப்பை தொடர்ந்து பிரதம விருந்தினர் உரை இடம் பெற்றது.சிறப்பு நிகழ்வாக விரிவுரையாளர் கவிஞர் வேல் நந்தகுமாரின் நெறியாள்கையில் ஆசிரிய மாணவர்கள் வழங்கிய கல்வியா செல்வமா வீரமா என்ற நாடகம் இடம்.பெற்றது.















# கலாசாலையில் உலக உளநாள் நிகழ்வுகள் கலாநிதி கா.கஜவிந்தன்

(சிரேஷ்ட விரிவுரையாளர், உளவியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

## அவர்கள் கலந்து சிறப்பித்தார்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் உலக உளநல நாளை ஒட்டிய சிறப்பு ஒன்று கூடல் 16.10.2024 புதன் காலை கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் இடம்பெற்றது.

ஆரம்பக்கல்விநெறி ஆசிரிய மாணவி ஜெ. சுலோச் சனாதேவி தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் அதிதி பேச்சாளராக யாழ்ப்பாண பல்கலைக்கழக உளவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி க. கஜவிந்தன் கலந்து கொண்டு எண்ணங்களின் வலிமை என்ற பொருளில் உரையாற்றினார்.

கலாசாலையின் பிரதி அதிபர் க. செந்தில்குமரன் அதிதி அறிமுகவுரையையும் ஆரம்பக்கல்வி ஆசிரிய மாணவன் சி. டனிஸ்ரன் உளநலநாள் என்ற பொருளி லான உரையையும் ஆற்றினர். கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் நிறைவுரை ஆற்றினார்.

கலாநிதி க. கஜவிந்தன் தான் எழுதிய நூல்களின் ஒரு தொகுதியை நூலக பொறுப்பு விரிவுரையாளர் வேலும்மயிலும் சேந்தனிடம் கையளித்தார்.















# இயல் இசை வாரிதி பிரமஸ்ரீ வீரமணிஐயர் நினைவரங்கம்
# திருமதி மதிவாணி விக்னராஜா
(ஓய்வுநிலை அழகியல்பாட பிரத்திக் கல்விப்பணிப்பாளர் வடமாகாண கல்வித்திணைக்களம்)
## அவர்கள் கலந்து சிறப்பித்தார்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளர் இயல் இசை வாரிதி பிரம்மஸ்ரீ ம.த.ந.வீரமணிஐயரை நினைவுறுத்தி நடைபெற்ற ஒன்றுகூடல் நிகழ்வு 22.10.2024 புதன்கிழமை காலை ஆரம்பக்கல்வி ஆசிரிய மாணவி திருமதி கோகுலக்கண்ணன் மைதிலி தலைமையில்இடம்பெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில் பிரம்மஸ்ரீ வீரமணிஐயரின் திருவுவச்சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு நினைவுச் சுடர்கள் ஏற்றி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் அதிதி பேச்சாளராக வடக்கு மாகாண கல்வித் திணைக்கள அழகியல் பாட முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மதிவாணி விக்னராஜா கலந்து கொண்டு யாழ்ப்பாணம் வீரமணிஐயர் - ஒரு பன்முகப் பார்வை. என்ற பொருளில் உரை ஆற்றினார்.

அவருடன் பழகிய அனுபவங்களை வைத்து இதுவரை வீரமணிஐயரின் ஆர்வலர்கள் அறிந்திருக்காத பல அரிய தகவல்களை சுட்டிக்காட்டி உரையை நிகழ்த்தினார்.

ஆசிரிய மாணவர்கள் சார்பில் விசேட கல்விநெறியைச் சேர்ந்த ஆசிரிய மாணவி திருமதி அஸ்மிலா பேகம் - பிரம்மஸ்ரீ வீரமணிஐயர் என்ற பொருளில் உரை ஆற்றினார்.

கலாசாலை விரிவுரையாளர் கவிஞர் வேல் நந்தகுமார் அதிதிப் பேச்சாளர் அறிமுக உரையை ஆற்றினார். ஆரம்பக்கல்விநெறி ஆசிரிய மாணவன் இ.இராசநாதன் வீரமணிஐயர் இயற்றிய கீர்த்தனை ஒன்றினைப் பாடினார்.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் நிறை-வுரை ஆற்றினார். அதிதி பேச்சாளராக் கலந்துகொண்ட திருமதி மதிவாணி விக்னராஜா கலாசாலை முகாமைத்துவக் குழுவினரால் கௌரவிக்கப்பட்டார்.








# கலாசாலையின் சிவன் ஆலயத்தில் மணவாளக்கோலத்திருவிழா

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் அமைந்துள்ள யோகாம்பிகை சமேத யோகலிங்கேஸ்வரர் ஆலயத்தில் 2014 ஆம் ஆண்டு ஐப்பசி பூச நட்சத்திர நாளில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றதையொட்டி இன்று 25.10.2024 ஐப்பசி பூச நாளில் மணவாள கோல திருவிழா நடைபெற்றது.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ பா செல்வசேனக் குருக்கள் கிரியைகளை நெறிப்படுத்தினார். இந்துமன்ற காப்பாளர் விரிவுரையாளர் கு பாலசண்முகன் ஒழுங்கமைப்புகளை மேற்கொண்டார்.

ஸ்நபன அபிஷேகம் விசேட பூஜை வேத, திருமுறை பாராயணம் லிங்காஷ்டக பாராயணம் என்பன இடம்பெற்று நிறைவாக மாகேஸ்வர பூசையும் நடைபெற்றது.








# பாராட்டி வாழ்த்துகிறோம்

கலாசாலையின் நாடகபாட விரிவுரையாளர் திருமதி சந்திரிகா தர்மரட்ணம் எழுதிய **கூடி வாழ்வோம்** நாடக நூல் வடமாகாண மட்டத்தில் சிறந்த நாடக நூல் பரிசுக்காக அறிவிக்கப்பட்டுள்ளது.

திருமதி சந்திரிகா தர்மரட்ணம் அவர்களுக்கு கலாசாலை சமூகத்தின் சார்பில் எமது வாழ்த்துகள்









# கலாசாலையில் அமைந்துள்ள புனித மரியன்னை சிற்றாலயத்தின் பெருநாள்

கலாசாலையில் அமைந்துள்ள மரியன்னை சிற்றால யத்தின் பெருநாள் திருப்பலி 30.10.2024 புதன்கிழமை காலை ஒப்புக்கொடுக்கப்பட்டது.

யாழ் மறைக்கல்வி நடுவுநிலைய இயக்குநர் அருட்பணி. வின்சன் அடிகளாரதும், யாழ். அகவொளி நிறுவனத்தின் உதவி இயக்குநர் அருட்பணி ஆ.அன்ரன் ஜெரால்ட் அடிகளாரதும் பங்கேற்புடன் திருப்பலி ஒப்புக்கொடுக் கப்பட்டது.

நிகழ்வில் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் வாழ் த்துரை வழங்கினார்.

மாதாவின் திருச்சொரூபம் சிற்றாலயத்தில் இருந்து பிர- தான மண்டபத்திற்கு ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு பிரதான மண்டபத்தில் திருப்பலி இடம்பெற்றது.

நிகழ்வை கலாசாலை கிறிஸ்தவ மன்றத்தின் பொறுப்பு விரிவு ரையாளர் பிரபாலினி தனம், கிறிஸ்தவ பாட விரிவுரையாளர் ஜே.பாலகுமார் ஆகியோர் நெறிப் படுத்தினர்.

யாழ்ப்பாணத் தேசிய கல்வியியல் கல்லூரியின் பீடாதி பதியின் வழிப்படுத்தலில் விரிவுரையாளர் ஜேம்ஸ் அவர்- களின் பங்கேற்புடன் மாணவ ஆசிரியர்களும் திருப்பலிப் பூசையில் பங்குபற்றி சிறப்பித்தனர்.



















# கலாசாலையில் அஞ்சல் வாக்குப்பதிவு 01ஆம் 04ஆம் திகதிகளில் வாக்களிப்பது எப்படி என்ற செயலமர்வும் கலாசாலையில் இடம்பெற்றது

எதிர்வரும் 14.11.2024 நடைபெறவுள்ள பாராளு மன்றப் பொதுத் தேர்தலுக்கான அஞ்சல் வாக்க ளிப்பு நிலையமாக கோப்பாய் ஆசிரியர் கலாசா லையும் செயற்படவுள்ளது. கலாசாலையின் அலு வலர்கள் இதில் வாக்களிக்கவுள்ளனர். 01.11.2024 வெள்ளிக்கிழமை மற்றும் 04.11.2024 திங்கள் கிழமை ஆகிய நாள்களில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரை இந்த வாக்குப் பதிவு இடம்பெறவுள்ளது. இதன் அத் தாட்சிப் படுத்தும் அலுவலராகக் கலாசாலை அதிபர் செயற்படுவார்.

இதேவேளை யாழ்ப்பாண மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரின் அறிவுறுத்தலுக்கமைவாக கலாசா லையின் அலுவலர்கள் மற்றும் ஆசிரிய மாண வர்கள் அனைவருக்கும் பாராளுமன்றத் தேர்த லில் வாக்களிப்பது எப்படி என்பது பற்றிய விளக்க செயலமர்வு 30.10.2024 புதன் கிழமை இடம்பெற்றது.

கலாசாலை சார்பில் தெரிவத்தாட்சி அலுவலரால் நடத்தப்பட்ட வழிகாட்டல் செயலமர்வில் பங்கு பற்றிய கலாசாலை விரிவுரையாளர் வேலும் மயிலும் சேந்தன் வளவாளராகச் செயற்பட்டு செய லமர்வினை நடத்தினார்.

எதிர்வரும் 14.11.2024 வாக்குப்பதிவு காலை 7 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை இடம் பெறவுள்ளது. இதில் கலாசாலை அலுவலர்கள் பலர் தேர்தல் கடமைகளில் உள்வாங்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றமையாலேயே அஞ்ல் வாக்குப்பதிவு முற்கூட்டியே கலாசாலையில் இடம் பெறுகின்றது.








## உள்ளகப் பரீட்சைப் புள்ளிகள் மற்றும் கணிப்பீட்டுப் புள்ளிகள் பரீட்சைத் திணைக்களத்திடம் கையளிப்பு எதிர்வரும் டிசம்பர் மாதம் பரீட்சை முடிவுகள் வெளிவரும்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இருந்து 2021 – 2022 கல்வியாண்டில் கற்கை நெறியை மேற்கொண்ட ஆசிரிய பயிலுநர்களின் இறுதிப்பரீட்சைப் பெறுபேற்று க்குரிய ஆவணங்களாக கலாசாலையால் வழங்கப்படும் கணிப்பீட்டுப் புள்ளிகள் மற்றும் பொதுப்பாடங்களுக்குரிய உள்ளகப் பரீட்சைப் புள்ளிகள் என்பன கலாசாலை அதிபரால் கடந்த 28.10.2024 திங்கள்கிழமை பெலவத் தையில் உள்ள இலங்கைப் பரீட்சைத்திணைக் களத் தில் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டன. இதே வேளை நடைபெற்று முடிந்த இறுதிப் பரீட்சைக்குரிய பெறுபேறுகள் எதிர்வரும் டிசம்பர் மாதத்தில் வெளியிட ப்படும் எனத்தெரிய வருகின்றது.

# ஆசிரியத்துவம் – ஒரு பன்மைத்துவ நோக்கு



இ.செந்தூர்ச்செல்வன்
விஞ்ஞானக்கல்விநெறி
ஆசிரிய மாணவன் (2023/2024)

ஆசிரியர்கள் (ஆசு+இரியர்கள்) அதாவது மாணவர்களின் மனமாசை நீக்கி நல்வாழ்வு ஊட்டி அவர்களின் வாழ்வை வளப்படுத்துபவர்கள் வெறுமனே படியை நோக்கி கடமையாற்றுபவர்கள் அல்ல ஆசிரி யர்கள்.

இலக்கியங்கள் குறித்து நிற்கின்ற ஆசிரியர்கள் தமது பார்வையில் வேறுபட்ட பன்மைத்துவம் உடையவர்களாக திகழுகின்றார்கள். இவர்களது பாத்திரப்படைப்பு இன்றும் நமக்கு பல நல்ல செய்திகளை உள்ளடக்குவனவாக அமைந்துள்ளது என்பது சிறப்பே.

கம்பராமாயணத்தில் வசிட்டர் இராமன் இலக்கும ணர்க-ளில் குலகுரு. வசிட்டரின் ஆசிரியர்துவம் என் பது ஆரம்பகல்வி ஆசிரியர்களை போன்றது. மாண வர்களின் உளப்பாங்கினை அறிந்து அதற் கேற்றால் போல் கற்பித்து அவர்களை உயர்வடைய செய்வது வசிட்டரின் குருகுலவாசம் இராமனையும் அவனது சகோதரர்களையும் எவ்வாறு புடம்போட்டது என்பதை இலக்கிய நகர்வுகளின் ஊடாக நாம் அறிந்து கொள்ளலாம். ஆரம்பக்கல்வி ஆசி ரியர்களுக்கு மிக முக்கியமான பொறுப்பு உண்டு எனவே ஆரம்பக் கல்வி ஆசிரிய வாண்மைத்துவம் வசிட்டர் என்கின்ற பாத்தித்தினூடு வெளிப்படுத்தப்படுகின்றது.

இராமனையும் இலக்குமணனையும் விசுவாமித்திர் தனது வேள்வி தடைப்படாது இருக்க அழைத்து செல்கிறார். விசுவாமித்திர் இடைநிலை கல்வி ஆசிரியரின் வகிப்பாக உடையவர்

எது நோக்கமோ அந்நோக்கத்தை அடைய சிறப்பு தேர்ச்சி முக்கியம். அந்த சிறப்பு தேர்ச்சியை வழங்கும் வகையில் இடைநிலை கல்வி ஆசிரியர் கள் தமது பாதையை அமைத்துக்கொள்ள வேண்டும்.

தாடகை வேள்வியை அளிப்பதற்காக வருகிறாள். இராமா அம்பை விடு என்றார் விசுவாமித்திரர். ஆனால் இராமனால் அம்பை விட முடியவில்லை ஏனெனில் வசிட்டரின் கற்பித்தலின் படி பெண்கள் மீது அம்பை விடக்கூடாது. விசுவாமித்திரர் இராவணனின் தவத் தை புரிந்துகொண்டார் பெண்ணென மனத்திடை பெருந்தனை நினைத்திட்டார் எனக்கம்பரும் புகழ்ந்துகொண்டார்.

விசுவாமித்திரர் சொன்னனார் இராமா, பெண் உருவம் தாங்கியவர் அனைவரும் பெண்கள் அல்ல. பெண்கள் மென்மை குணம் மிக்கவர்கள்

எனவே இவன் மீது அம்பை விடு என்றார் இராமர் கண் களில் தயக்கம் விசுவாமித்திரர் கூறினார்

இராமன் இவள் ஏன் என்னை உணடிலள் என்றால் கோது என நினைத்து உண்டினள். நான் சதையற்ற எலும்புகளை மட்டும் கோதான உடலை உடை யவன் எனவே அவனது பசிக்கு ஈடாக மாட்டேன் என நினைத் து உண்டினள் என்றார்.தெளிவு பிறந்து தாடகை வதம் நிகழ்ந்தது.

இடை நிலை கல்வி ஆசிரியர்கள் பொறுப்புடன் நடந்து கொள்ளவேண்டும் இலக்குகளை நோக்கி மாணவர்-களைக் வழிப்படுத்த வேண்டும். அவர்களின் கற்பித்தல் திறன் மாணவர்களை கவரத்தக்கதாக அவர்களை ஆற்றலாளர்களாக மாற்ற வழி சமைக்க வேண்டும்.

தேர்ச்சி மிக்க ஆசிரியர் வான்மைத்துவம் மகாபாரதத் தில் துரோணர் எனும் பாத்திரத்தினால் காட்டப்படு கின்றது. துரோணர் அரசிளங் குமார்களுக்கு மட்டும் கல்வி கற்பிக்கும் தேர்ச்சி மிக்கவர். ஏகலைவன் வேட்டு வச் சிறுவன் துரோணரிடத்தில் வில்வித்தை கற் கும் வாய்ப்பை இழக்கின்றான். அவன் மனம்தளராது துரோணரின் சிலையை வைத்து வில்வித்தை பயின் கிறான் ஏகலைவனின் கற்றல் முறைசாரா கற்றல் அர்சு-ணனின் கற்றல் முறை சார்ந்த கற்றல் இரு வகையான கற்றல் முறைகளை அறிமுகம் செய்து இரு வழிகளிலும் சிறந்த ஆற்றலாளர்களை உருவாக்க முடியும் என்ப தற்கு இது சிறந்த எடுத்துக்காட்டு.

சமூக நோக்கில் ஆசிரியர்களின் கற்றல் வசதி படைத் தவர்களாக இலக்குகளை தேர்ச்சி மாணவர்களை வழிப்படுத்தும் ஊட்டிகளாக அமைத்து கல்வி உலகின் கலங்கரை விளக்காக அமைந்திருக்க வேண்டும்

# சிறுவர் தினமும் விசேட தேவையுடைய சிறுவர்களும்



ஷாஜகான் பாத்திமா நுஸ்லா
விசேட கல்விநெறி
ஆசிரிய மாணவி (2023/2024)

இந்த உலகில் இரண்டு விதமான பிரஜைகள் முக்கியத்துவப்படுத்தப்படுகின்றார்கள். ஒன்று சிறுவர் மற்றையது முதியோர். எனவே தான் இவை இரண்டும் ஒரே மாதத்திலேயே ஒரே தினமாக சிறுவர் தினமும் முதியோர் தினமும் ஒக்டோபர் முதலாம் திகதி அனுஷ்டிக்கப் படுகின்றது. சிறுவர்கள் எனும் போது ஐக்கிய நாடுகள் தாபனத்தின் கணிப்பின்படி 1 தொடக் கம் 18 வயதிற்குட்பட்டவர்கள் அனைவரையும் நாம் சிறுவர்கள் என அழைக்கின்றோம். ஆனாலும் கூட நடைமுறை வாழ்வில் தரம் 1 இலிருந்து தரம் 5 வரை பயிலுகின்ற மாணவர் களை தான் நாம் அதிகம் சிறுவர்கள் என்ற கண்ணோட்டத்தில் நோக்குகின்றோம். ஏனைய-வர்களை பருவ நிலைக்கமைய கட்டிளமைப் பருவம் போன்றவற்றினூடாக அவர் களை இளைஞர்களாக நாங்கள் நோக்குகின்ற ஒரு நிலையும் இருக்கின்றது. சமுதாயத்தில் பல்வேறு வகையான சிறுவர்கள் வாழ்கின்றனர். கல்வி உரிமை மறுக்கப்பட்ட சிறுவர்கள், கல்வி கற்க ஆசை இருந்தும் அதை நிறைவேற்ற முடியாத சிறுவர்கள், சிறுவயதிலேயே வேலை க்கு அமர்த்தப்பட்ட சிறுவர்கள், பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படும் சிறுவர்கள் அது போல ஒரு முக்கியமான சிறுவர்களாக நாங்கள் சமுதாயத்தில் பார்க்க வேண்டியவர்கள் விசேட தேவை கொண்ட சிறுவர்கள். விசேட தேவை கொண்ட சிறுவர்கள் எனும் போது அவர்களும் இந்த சமுதாயத்தின் பிரஜைகளாக போற்றப்பட வேண்டியவர்கள்.

விசேட தேவையுடைய பிள்ளைகள் என்பவர்கள் மற்ற குழந்தைகளைப் போலவே கற்றுக் கொள்ளவும் வாழவும் வளரவும் ஆசைப்படும் குழந்தைகள் தான். ஆனால் அவர்களுக்கு உடல், உள அல்லது கற்றல் தொடர்பான சில குறிப்பிட்ட தேவைகள் இருக்கும்.

அவர்களுக்கு உடல், உள அல்லது கற்றல் தொடர்பான சில குறிப்பிட்ட தேவைகள் இருக்கும். இந்த தேவைகள் அவர்கள் தங்களது தினசரி வாழ்க்கையை எளிதாக நடத்திக் கொள்ளவும் தங்களது முழுத் திறமையை வெளிப்படுத்தவும் சிறப்புக் கவனம் மற்றும் ஆதரவும் தேவைப்படும் என்பதைக் குறிக்கின்றன.

இவ்வாறான மாணவர்களிடம் சாதாரண மாணர் களை விட ஏதோ ஒரு திறன் விருத்தியடை ந்து இருக்கின்றது என்பதைக் கருத்திற் கொண்டு உடல் உளம் பாதிக்கப்பட்ட பிள்ளைகளை விசேட தேவையடையோர், மாற்றுத் திறனுடையோர், மாற்று வலுவுள்ளோர் என்ற சிறப்புப் பெயரால் அழைக் கப்படுகின்றார்கள். அந்த வகையில் விசேட தேவையுடையவர்களில் செவிப்புல, பார்வை, நுண்ணறிவு, உடல் சார் இயலாமையுடையோரும் மீத்திறனுடையோரும் உள்ளடங்குவர்.

மீத்திறனுடைய பிள்ளைகளுக்கு விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளதனால் அவர்களும் விசேட தேவையுடையோரில் அடங்குவர். விசேட தேவையுடையோரது வாழ்விற்கு முக்கிய உந்து சக்தியாக கல்வி காணப்படுகின்றது.

அதற்காகத்தான் இலங்கையிலும் அவர்களுக்காக விசேட பாடசாலைகள் அமைக்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாது பொதுப் பாடசாலைகளில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கல்வி வழங்கு வதற்காக விசேட கல்வி அலகுகளும் காணப்படு கின்றன. சம காலத்தில் உட்படுத்தல் கல்வி என்ற ஒரு விடயமும் இவர்களுக்காக நடைமுறையில் உள்ளது.

## சிறுவர் தினமும் விசேட தேவையுடைய சிறுவர்களும்

தொடர்ச்சி……

உட்படுத்தல் கல்வி என்பது விசேட தேவையுடைய மாணவர்கள் சம வயதுக் குழுவினருடன் இணைந்து சாதாரண மாணவருடன் தமது கல்வியைத் தொடர் வதனைக் குறிக்கின்றது. இவ்வாறான விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கு கல்வி கற்பதற்கு பல்வேறு வாய்ப்புகள் காணப்படுகின்றன. இவ்வாறான பிள்ளைகள் கல்வி கற்றும் தொழிற் பயிற்சிகள் பயின்றும் வாழ்க்கையில் முன்னேறி வெற்றியடைந்துள்ளனர்.

விசேட தேவையுடைய மாணவர்கள் சம வயதுக் குழுவினருடன் இணைந்து சாதாரண மாணவருடன் இவ்வாறு இவர்களைப் பற்றி கூறிக்கொண்டே போகலாம் இவர்களை நாம் பரிதாபமாகப் பார்க்கக் கூடாது அவர்களும் அத னை விரும்புவதில்லை.

இவர்களையும் சமூகத்துடன் இணைத்துக் கொள்ள வேண்டும். சமூகத்தில் கூட இவர்களை ஒதக்கி வைத்த காலம் தற்போது இல்லை. சமூ கத்தில் விசேட தேவையடையோருக்கான கவனம் சற்று அதிகரித்துள்ளது எனக் கூறலாம். அண்மையில் ஜனாதிபதித் தேர்தலில் கூட பார்வையற்றவர்கள் வாக்களிப்பதற்கான ஒரு முறையையும் அறிமுகப்படுத்தியிருந்தார்கள்.

ஆகவே நாமும் விசேட தேவையடையோரையும் எம்மோடு இணைத்து சாதாரண மனிதரைப் போலவே சமூகத்தில் செயற்பட வாய்ப்புக்களை வழங்கி அவர்களின் வாழ்வு மிளிர ஒருபுள்ளியாகவாவது இருப்போம்.

## ஆழ்ந்த அனுதாபங்கள்

எமது கலாசாலையின் கல்விசாரா உத்தியோகத்தர் திரு ந.அகிலன் அவர்களின் அன்புத் தாய் நல்லையா தவமணி காலமானார். அன்னாரின் பிரிவால் துயருறும் அகிலன் அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

